DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.1409/2025

Deposition of witness: Additional witness/PW7

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.அறிவழகன், சிறப்பு உதவி ஆய்வாளர். | Taluk | |
| Father's Name | கிருஷ்ணன் | Village | |
| Age | 48 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **21.07.2026.** | | | |

**(Accused 1 to 4 present)**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:</u>**

**1.** நான் தற்போது பண்ருட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் அமிர்தராஜ் மற்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் புஷ்பராஜ் ஆகியோர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. தலைமை காவலர் அமிர்தராஜ் பண்ருட்டி காவல் நிலையத்தில் கடந்த 03.06.2023 அன்று நிலைய பொறுப்பில் இருந்தபோது, பண்ருட்டி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று, மேற்படி மருத்துவமனைக்கு சென்று, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சக்திவேல் மகன் பரணி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலையம் வந்து, சுமார் 14.30 மணியளவில் புகார் வாக்குமூல அடிப்படையில் நிலைய குற்ற எண்.357/2023 இ.த.ச. பிரிவுகள் 294(b), 323-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதனுடன் அசல் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து, வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் புஷ்பராஜ் பார்வைக்கு வைத்துள்ளார். **(மேற்படி புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-2 மற்றும் அ.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னிட்டு, உதவி ஆய்வாளர் புஷ்பராஜ் வழக்கு கோப்பினை பார்வையிட்டு, தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, கடந்த 03.06.2023 அன்று சுமார் 14.30 மணியளவில் சம்பவயிடம் சென்று, சாட்சிகள் ரவி, பக்கிரி ஆகியோர்கள் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகசர் தயார் செய்து, பார்வை மகசரில் மேற்சொன்ன சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்று, அவர்களை விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை**

**மகசர் முறையே அ.சா.ஆ4 மற்றும் அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும், இவ்வழக்கின் புகார்தாரரும், காயம்பட்ட நபருமான பரணி என்பவரையும், கண்ணுற்ற சாட்சிகள் சக்திவேல், மாதவன் ஆகியோர்களையும் கடந்த 03.06.2023 அன்று விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. மேற்படி சாட்சிகளின் விசாரணையிலிருந்து வழக்கு சம்பவம் உண்மையென தெரியவந்ததில், வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான தமிழ்ச்செல்வன், முருகன், வடிவுநாதன்(எ)எம்.ஜி.ஆர், மணிகண்டன் ஆகியோர்களை தேடியதில் எதிரிகள் அனைவரும் கடந்த 03.06.2023 அன்று பண்ருட்டி அம்பேத்கர் நகர், முருகன் கோவில் அருகே இருந்தவர்களை உதவி ஆய்வாளர் அடையாளம் கண்டு, சுமார் 17.30 மணியளவில் காரணம் கூறி, கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக சோதனை செய்து, பாராவசம் ஒப்படைத்து தக்க இருநபர் ஜாமினில் நிலையத்திலிருந்து விடுவித்துள்ளார்.

5. வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட பரணி என்பவருக்கு சிகிச்சை அளித்த பண்ருட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் வேல்முருகன் என்பவரை கடந்த 25.06.2023 அன்று விசாரணை செய்து, மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று வழங்கிய காயச்சான்றை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேலும், மேற்சொன்ன தலைமை காவலர் அமிர்தராஜை கடந்த 25.06.2023 அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. இத்துடன் உதவி ஆய்வாளர் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323–ன் படி கடந்த 30.06.2023 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து, சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்சொன்ன உதவி ஆய்வாளர் விசாரணையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலானவர்கள் அவர்களது கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் சொல்லியுள்ளார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரை பெற்று சம்பவ இடம் செல்லாமலும், சாட்சிகளை விசாரிக்காமலும் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டன என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் புலன் விசாரணை அதிகாரி கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.